2013 ஏப்ரல் 5]

நடத்துவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியை காணிக்கையாக்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

164—

தனி மாவட்டம்

***5809—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தைப் பிரித்து மேட்டூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து மேட்டூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வகுத்துள்ள குறைந்தபட்ச அளவுகோலான பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தினுடைய மக்கள்தொகை, பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தினுடைய பரப்பளவு, பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தினுடைய வருவாய்க் கோட்டங்கள், வருவாய் வட்டங்கள், வருவாய்க் கிராமங்கள் ஆக இவை அனைத்தையும் இன்றைக்கு ஒருங்கிணைத்துப் பார்க்கின்றபோது, இது எந்தவிதமான அளவுகோலையும் பூர்த்தி செய்யாமல் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள சேலம் மாவட்டத்தைப் பிரித்து, மேட்டூரைத்

தலைமையிடமாகக்கொண்டு ஒரு புதிய மாவட்டம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் 5,245 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், சுமார் 35 இலட்சம் மக்கள்தொகை கொண்டும், 20 ஊராட்சி ஒன்றியங்கள், 5 நகராட்சிகள், 33 பேரூராட்சிகள், 385 ஊராட்சிகள் கொண்டும், 4 கோட்டாட்சியர்கள், 9 தாலுகா, 631 வருவாய்க் கிராமங்கள் என பரந்து விரிந்துள்ளது சேலம் மாவட்டம், விழுப்புரம் எல்லையிலிருந்து கர்நாடகா மாநிலம் மாதேஸ்வரன் மலைவரை மிகப் பெரிய மாவட்டமாக உள்ளது. மிகவும் பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கின்ற சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, ஓமலூர், வீரபாண்டி என ஐந்து சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி மேட்டூர் அணைக்கும் பெருமை சேர்க்கின்ற வகையில் அரசினுடைய திட்டங்கள், நலத் திட்ட உதவிகள் நிருவாக வசதிக்காகவும், மேட்டூரைத் தலைமையிடமாகக் கொண்டு மேட்டூர் மாவட்டம் என்ற ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், சேலம் மாவட்டமும், நான் கூறிய அந்த ஐந்து சட்டமன்றத் தொகுதிகளும் மிகவும் வறட்சியான பகுதி ஆகும். அந்த இடத்திலே வாழ்கின்ற மிகவும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களுடைய வளர்ச்சிக்காகவும் இந்தப் புதிய மாவட்டத்தை உருவாக்கித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச்சென்று உருவாக்கித் தர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தப் பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தினுடைய மக்கள்தொகை குறைந்தபட்சம் 10*

2013 ஏப்ரல் 5]

இலட்சத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த மேட்டூர் பகுதியை நாம் பிரிக்கின்றபோது, 4 இலட்சத்து 17 ஆயிரம் மக்கள்தொகையை மட்டுமே கொண்டதாக இருக்கின்ற காரணத்தினாலும், பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தினுடைய பரப்பளவு குறைந்தபட்சம் 2,500 சதுர கிலோ மீட்டரைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த பகுதியானது 636 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினைக் கொண்டதாக இருக்கின்ற காரணத்தினாலும், பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தினுடைய வருவாய்க் கிராமங்கள் குறைந்தபட்சம் 200 ஆக இருக்க வேண்டும். ஆனால், மேட்டூர் பகுதி பிரிக்கப்படுகின்றபோது குறைந்தபட்சம் 48 வருவாய்க் கிராமங்களை மட்டுமே உள்ளடக்கி வருகின்ற காரணத்தினாலும், அதுமட்டுமல்லாமல், இவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மேட்டூர் பகுதியானது பூகோள ரீதியாக ஒரு மலை சார்ந்த பகுதி மட்டுமல்லாமல், கர்நாடக மாவட்டத்தினுடைய எல்லையை அது ஒட்டி இருக்கின்ற காரணத்தினாலும், மேட்டூர் நகராட்சியை நாம் மேலும் விரிவுபடுத்துவதற்கு போதுமான வசதிகள் அங்கே இல்லாத சூழ்நிலையிலும், அங்கே அருகில் இருக்கக்கூடிய ஓமலூர் வட்டத்தைப் பிரித்து இந்தப் பகுதிக்கு நாம் கொண்டுவர வேண்டுமென்று சொன்னாலும் அந்த ஓமலூர் வட்டம் சேலத்திற்கு அருகில் இருக்கின்ற காரணத்தினாலும், அங்கு இருக்கின்ற மக்கள் அதிக தூரம் இங்கே வரக்கூடிய சூழ்நிலை உள்ளது.

அதுமட்டுமல்லாமல், மக்களுக்கு கால விரயம் அதிகமாகக்கூடிய சூழ்நிலையும் அங்கு உருவாகும். எடப்பாடி வட்டத்தைப் பிரித்து இந்தப் பகுதியில் சேர்க்க வேண்டுமென்று சொன்னாலும், அந்தப் பகுதிக்கு அருகில் இருக்கின்ற காவேரி ஆறு குறுக்கே பாய்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதியைத் தாண்டி வரக்கூடிய சாலை வசதிகள் போதுமானதாக இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலும், இந்தப் பகுதியில் பூகோள ரீதியாக எந்தவிதமான அமைப்புகளையும் நாம் கூடுதலாக செய்யமுடியாமல் இருக்கின்ற காரணத்தினாலும், அரசு குறிப்பிடுகின்ற குறைந்தபட்ச அளவுகோலை எந்தச் சூழ்நிலையிலும் இந்த பகுதி நிறைவு செய்யாத காரணத்தினாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற சேலம் மாவட்டத்தைப் பிரித்து மேட்டூர் பகுதியை தனி மாவட்டமாக அறிவிக்க எந்தவிதமான

சாத்தியக்கூறுகளும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தோடு ஒரு காலத்தில் தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டமெல்லாம் இணைந்திருக்கின்றபோது, தருமபுரி மாவட்டத்தைத் தனியாகப் பிரித்து, அதை வறட்சியான பகுதியாகவும், அங்கே அடித்தட்டு மக்கள் அரசினுடைய எல்லா உதவிகளையும் பெறவேண்டும் என்ற அடிப்படையில், நிருவாக வசதிக்காக தருமபுரி மாவட்டத்தை தனி மாவட்டமாகப் பிரித்து, அதன் பிறகு, சேலத்தோடு இணைந்திருந்த கிருஷ்ணகிரியையும் தனியாகப் பிரித்து ஒரு தனி மாவட்டத்தை உருவாக்கினார்கள். அதுபோல் சேலம் மாவட்டத்தில் நான் கூறிய 5 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய பகுதிகள் வறட்சியான பகுதிகளாகும். அரசினுடைய திட்டங்கள் அந்த மக்களுக்கு விரைந்து செல்கின்ற வகையில், அந்தப் பகுதியின் முன்னேற்றத்திற்காக ஒரு தனி மாவட்டத்தை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் இங்கே கோரிக்கை வைத்திருக்கிறேன். அதன் அடிப்படையில் அமைச்சர் அவர்கள் இதை கண்டிப்பாக பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனி மாவட்டத்தினுடைய கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும்கூட, நான் இந்த நேரத்திலே பணிவோடு ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று விரும்புகிறேன். ஒரு தனி மாவட்டத்தை உருவாக்கவேண்டுமென்று சொல்லி கடந்த ஆட்சிக் காலத்திலே திருப்பூர் மாவட்டம் மட்டுமல்லாது தஞ்சாவூர் மாவட்டத்தையும் பிரித்து அறிவித்ததோடு நிறுத்திக்கொண்டார்கள். மாண்புமிகு இதய

2013 ஏப்ரல் 5]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பிறகுதான், கடந்த ஆட்சியாளர்கள் காலத்தில் அறிவிக்கப்பட்ட திருப்பூர் மாவட்டத்திற்கு 103 கோடி ரூபாய் செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஓர் இடத்திற்காக மட்டும் 50 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து, அங்கு அரசினுடைய பெருந்திட்ட வளாகத்திற்காக மீண்டும் 53 கோடி ரூபாயைத் தந்து, 103 கோடி ரூபாய் செலவில் கடந்த ஆட்சியாளர்கள் அறிவித்த திருப்பூர் மாவட்டத்திற்குத் தாயுள்ளத்தோடு ஒரு பெருந்திட்ட வளாகத்தை அமைத்துத் தந்திருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியை இந்த நேரத்தில் நான் பணிவோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து அரசினுடைய திட்டங்கள் அந்தப் பகுதிக்கு வேகமாகச் சென்று சேரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த மாவட்டத்தைப் பிரித்துத் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆக, அந்த அடிப்படையிலே கடைக்கோடியில் இருக்கக்கூடிய மக்களுக்கும் அரசினுடைய திட்டங்கள் விரைந்து சென்று சேரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், கடந்த காலத்தில் மக்கள் அதிகாரிகளைத் தேடிச் செல்லக்கூடியதாக இருந்த சூழ்நிலையை மாற்றி, மக்களைத் தேடி அதிகாரிகள் சென்று கடமைகளை ஆற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு 'அம்மா திட்டம்' என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வாரத்திலே ஒரு நாள் வருவாய்த் துறையைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளும் ஒவ்வொரு கிராமமாக நேரடியாகச் சென்று மக்களுடைய அடிப்படைக் குறைகள் அனைத்தையும் மனுக்களாகப் பெற்று, பெறப்படுகின்ற மனுக்கள் அனைத்திற்கும் அன்றைக்கே தீர்வு காணக்கூடிய நல்லாட்சி இன்று தமிழகத்திலே நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த குறைந்தபட்ச அளவுகோலை நிறைவு செய்யாத காரணத்தினால் 'அம்மா திட்டம்' என்கிற ஓர் அற்புதமான திட்டத்தைத் தொடர்ந்து அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாய் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

கடல் மீனவர்களுக்கு நவீன ரேடியோ கருவிகள் வழங்குதல், சேத்துப்பட்டு ஏரி, சென்னையில் மீன்பிடித் துறைமுகங்களைப் புனரமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

முற்பகல் 11-15

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவைப் பெருக்குவதிலும், கணிசமான அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் மீன்பிடித் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்றாலும் இந்தத் தொழிலை மேற்கொண்டு வரும் தமிழக மீனவர்கள் பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. மீனவர்களின் துயரினை உணர்ந்து எனது தலைமையிலான அரசு, மீன்பிடித் தடைக் காலங்களில் வழங்கப்பட்டு வரும் தொகையை இரட்டிப்பாக்கியது. மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் சிறப்பு நிவாரண உதவித் தொகையாக 4,000 ரூபாய் வழங்கும் முன்னோடித் திட்டம், விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் வழங்கும் திட்டம், விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் என பல்வேறு திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 5,600 மீன்பிடி விசைப்படகுகள் உள்ளன. சில மீனவர்கள் தங்கள் படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்களைப் பொருத்தியுள்ளனர். இன்னும் பெரும்பாலான விசைப்படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்கள் ஏதுமில்லை.